உ

சிவமயம்



யாழ்ப்பாணம் - சங்கானை கிழக்கைச்

சேர்ந்த

உயர்திரு.

பொன்னையா கனகரத்தினம் J. P.

அவர்களின்

சிவபதப் பேற்றின்

# நினைவு மலர்

18-09-1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் - சங்கானை கிழக்கைச்
சேர்ந்த

உயர்திரு.

பொன்னையா கனகரத்தினம் J. P.

அவர்களின்

சிவபதப் பேற்றின்

# நினைவு மலர்

18-09-1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

" நீர்க்குமிழிக்கு நிகரென்பார் யாக்கை
பிறந்தவர் யாவரும் இறப்பது சகஜம்
உறங்குவது போலும் சாக்காடு "

என்பர் வள்ளுவர்.


எங்கள் குடும்பத்துக்கு அன்புத் தெய்வமாக விளங்கியவர். எங்களை விட்டுப் பிரிந்த போதும், எங்கள் உள்ளத்தில் தெய்வமாகி என்றும் உறைந்திருக்கும், எங்கள் அன்பு ஐயாவிற்கு இம் மலரைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துவண்டிருக்கும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயர்திரு.

# பொன்னையா கனகரத்தினம் J.P.

அவர்கள்

தோற்றம் :
15 – 03 – 1912

மறைவு :
19 – 08 – 1998

மானிட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானிட ராக்கை வடிவு சிதம்பரம்
மானிட ராக்கை வடிவு சதாசிவம்
மானிட ராக்கை வடிவு திருக்கூத்தே.

— திருமந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தோத்திரத்திரட்டு

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓது நாவர்
    அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதித்தவழ் மாட வீதி
    மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வ மல்கு
    சீர்கொள் செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
    கணபதி யீச்சரங் காமுறவே.

தம்மையே புகழ்ந் திச்சை பேசினுஞ்
    சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
    புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
    ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மையே சிவ லோகம் ஆள்வதற்
    கியாதும் ஐயுற வில்லையே.

## திருவாசகம்

கண்க ளிரண்டும் அவன் கழல் கண்டு
    களிப்பன ஆகாதே
காரிகை யார்கடம் வாழ்விலென் வாழ்வு
    கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு
    மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும்
    வணங்குதும் ஆகாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்களி கூர்தரு பாட்டொலா டாடல்
பயின்றிடும் ஆகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள்
பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து
வெளிப்படும் ஆகாதே
மீன் வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படும் ஆயிடிலே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனை
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரவென் கண்குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத வறிவுபெற் றேன்பெற்ற
தார் பெறு வாருலகில்
ஊரு முலகுங் கழற வுழறி
யுமை மண வாளனுக்காட்
பாரும் விசும்பு மறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் மரன்மகள்
மற்பொரு திரண்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர் கொடு பணிவோனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை விபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

திருமக ளுலாவு மிருபுய முராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
ஜெகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதரு குமாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில் விளையாடு
மரகத மயூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினை விடாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி னோதப் பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# திரு. பொன்னையா கனகரத்தினம் J. P அவர்களின் வாழ்க்கை வரலாறு

உலகில் எத்தனையோ பேர் பிறக்கிறார்கள்; சில காலம் வாழ்ந்து பின்னர் மறைந்து விடுகிறார்கள். மறைந்தும் மறையாது, மக்கள் மனதில் அழியாத தனி இடத்தை நிரந்தரமாகப் பெற்று, அணையா மணிவிளக்காய் சரித்திரத்தில் இடம் பெற்று பிரகாசிப்போர் அரிதிலும் அரிதே! அங்ஙனம் அமரத்துவம் எய்திய உத்தமரே திரு. பொ. கனகரத்தினம் அவர்கள் ஆவார். இறப்பவர் எல்லாம் அமரரல்ல. அத்தகுதி ஒரு சிலருக்கே உண்டு. அத்தகுதிக்குப் பூரண உரித்துடையவர் எங்கள் பெரியார் திரு. கனகரத்தினம் ஆவார்.

இவர் யாழ்ப்பாணம் - சங்கானையில் வாழ்ந்த உயர்திரு. இளையதம்பி பொன்னையா — அன்னம்மா தம்பதிகளின் தவப் பயனால் உதித்த மூத்த புத்திரனாவார். இவர் 1912ம் ஆண்டு பங்குனி மாதம் பதினைந்தாம் நாள் (15-03-1912) இம்மண்ணில் தோன்றினார். ''விளையும் பயிரை முளையிலே தெரியும்'' என்பதற்கிணங்க இவர் சிறுவயதிலேயே அறிவும், நல்ல பண்பும், எந்த வேலையையும் சிரத்தையாகவும், நேர்மையாகவும். முழு முயற்சியுடனும் செய்யும் தன்மை படைத்தவராக வளர்ந்து வந்தார்.

திரு. பொ. கனகரத்தினம் அவர்களுக்கு ஒரு சகோதரியும், நான்கு சகோதரர்களும் உண்டு. காலஞ்சென்ற திருமதி இரத்தினம் நடராஜா, கனடாவில் வசிக்கும் ஜெயராஜா, காலஞ்சென்றவர்களான அரசரத்தினம், நடராஜா, குணரத்தினம் ஆகியோராவர். இவர் ஆண்கள் ஐவரில் மூத்தவராக அவதரித்ததால் மிகவும் பொறுமையும், கடமையுணர்ச்சியும், தர்ம குணங்கள் நிரம்பியவராகவும், சகோதர பாசம் நிரம்பியவராகவும், மற்றோரிடம் மிகுந்த அன்பும், பணிவும் கொண்டவராக இருந்தமையினாலும் இவரது தாயார் அவரை இளமையில் ''தருமர்'' என்றே கூறுவாராம்.

அமரர் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை 1918ல் சங்கானை யா/அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையிலும் உயர் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் அதன்பின் சென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிக்ஸ் கல்லூரியிலும் திறம்படக் கற்றார். கல்வியில் மட்டும் அல்லாது விளையாட்டுத் துறைகளிலும் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

அமரர் பொ. கனகரத்தினம் அவர்கள் சிறுவயதிலேயே தனது தந்தையாரை இழக்க நேர்ந்தது. குடும்பச் சுமையை ஏற்க வேண்டியவரானார். மனம் தளராது 1929 ல் Junior Cambridge இல் தனது படிப்பை முடித்துக் கொண்டு குடும்பப் பொறுப்பை ஏற்று தனது 16 வது வயதில் நோர்வூட்டில் P.W.D சப் ஒவசியராகிப் பின் 1937 ல் மஸ்கேலியா P. W. D ஒவசியராகி ஓய்வு பெறும் வரை தொடர்ந்து அந்த 1971ம் ஆண்டு வரை கடமையாற்றினார். இவர் தொழிலில் ஈடுபட்ட காலங்களிலேயே மும்மொழிகளிலும் சரளமாகப் பேசும் திறனைப் பெற்றார்.

இவர் 1940ம் ஆண்டு ஆனி ஏழாம் நாள் சங்கானையைச் சேர்ந்த வெலிமடை P.W.D ஒவசியர் உயர்திரு. தில்லையம்பலம் கணபதிப்பிள்ளை — ஆச்சிமுத்து தம்பதிகளின் மூத்த மகளான ஞானரத்தினம் அவர்களை தனக்கேற்ற "இரத்தின" மாய்க் கொண்டு, வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார். ஊரும் உலகும் வியந்து, மகிழ்ந்து போற்றும் இவர்களின் இல்லறம் இனிது நகர்ந்தோடியது. நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், இனப் பற்றும் மிகுந்திருந்ததுடன், சைவத்திலும் கலாச்சாரத்திலும் தீவிரமாக இவர் உள்ளத்தில் நிறைந்திருந்த பற்று இவருக்கு அயராத தனி வீரத்தை உண்டு பண்ணியது. சமூகநல அபிவிருத்திக்குரிய எல்லாத் தொண்டுகளிலும், பொது வேலைகளிலும் முன்னின்று உடல் உழைப்பு நல்குவதுடன் மட்டுமல்லாது ஏராளமான பொருள் உதவியும் பொது நன்மைகளுக்காகச் செலவிட்டு வந்தார். இதற்கு மணிமுடிவைத்தாற் போல இவர் அன்றாடக் காரியங்களை இவர் நியதியாகக் கடைப்பிடித்து வாழுவதற்கு அமரரது மனைவி ஞானரத்தினம் பக்கபலமாக இருந்தார் எனின் அது மிகையாகாது.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க கருத்தொருமித்த தம்பதிகளின் இல்லறமாம் நல்லறத்தின் பயனாக முறையே பத்மராஜன், பத்மராணி, ரவீந்திரன், குணரதி எனும் மக்கட் செல்வங்கள் தோன்றி அனைவரையும் இன்பக் கடலில் ஆழ்த்தினர். பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் எதுவும் தவறவிடாது கருத்திற் கொண்டு, அன்பையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவையும், பண்பையும் கலந்து ஊட்டிப் பேணி வளர்த்தனர். தாரமும், குருவும் தலையில் எழுத்து என்பார். அங்ஙனம் தன் பிள்ளைகள் வாழ்வில் ஒளியூட்டி மகிழ்வுறச் செய்ய முறையே இந்திராணி, செ. சிவன்நேசன், அம்பாளிகை, க. லோகேந்திரா என்போரை ஊர் மெச்சும் நன் மருமக்களாய் பெற்று மண முடித்து வைத்தார். அவர்கள் ஆனந்த வாழ்வையும் முன்னேற் றத்தையும் கண்டு பரவசமடைந்தார்.இறைவன் அருளினால் அவர் தம் பேரப்பிள்ளைகளாக திருமதி இராஜயோகினி சிறிகாந்தன், ரஜீவ்கார்த்திகன், சஞ்ஜீவ்விஜேந்திரா, சுஜீதா, – திருமதி சிவானி கருணாகரன், திருமதி சிவாஜினி கருணாகரன், சிவாஞ்சன், சிவாஞ்சலி – சஞ்ஜே, சியாமா – டோன் மீரா, ஜேசன்ரவி ஆகியோர் இவர் தம் பாசமலர்களாக அமைந்து விளங்குகின் றனர். இவர்களில் கல்வித்திறனையும், பண்பின் உயர்வையும் அவ்வப்போது பார்த்து மகிழ்ந்தும், அவர்களைப் பாராட்டியும், ஊக்குவித்தும் அவர்களின் பாசத்தில் பின்னிப் பிணைந்தும் வாழ்ந்திருந்தார். அன்பிற்கும், ஆசைக்கும் ஓர் பூட்டனைப் (ஜெனுஷன்) பெற்று பூரிப்படைந்தார்.

இவர் மஸ்கேலியாவில் கடமை புரிந்த காலத்தில் பல முக்கிய கட்டிட வேலைகளைப் பொறுப்பேற்று பல பிரமுகர்கள் மெச்சும் வண்ணம் அமைத்திருந்தார். அங்குள்ள இரண்டாவது பாரிய நீர்த்தேக்கமான மௌசாகல புதிதாக நிர்மாணிக்கப்பட்ட போதும், பழைய மஸ்கேலியா நகரம் நீரில் மூழ்கிய வேளை புதிய பட்டினம் (Maskeliya New town) அமைக்கப்பட்டபோதும் பல முக்கிய கட்டிடங்கள் கட்டுவோர் பலருக்கும் ஆலோசனை கூறி உதவிகளும் புரிந்தார்.

சிவனொளிபாத மலைக்கு ஏறும்போது அடிவாரத்தில் இருக்கும் பாரிய 'மக்கரத்தோரண' இவரின் மேற்பார்வையில் நடைபெற்றது. அதன் பெரிய புகைப்படத்தைப் பலருக்கும் காட்டிப் பெருமைப்படுவார். அக்காலத்தில் அங்கு விஜயம் செய்யும் பிரமுகர்களுடனும், ஊரை அறியாது பார்க்கப்போபவர் களுடனும், இனபந்துக்களுடனும் சேர்ந்தும், வேலை விசய மாகவும் 65 தடவைகள் சிவனொளிபாத மலை உச்சி வரை சென்றதாகக் கூறுவார். அங்கு அவரைப் பலரும் முடிசூடா மன்னன் (an uncrowned prince) என்றே மரியாதை செய்தனர். அன்னாரின் இறுதி அஞ்சலியில் உரையாற்றியவரும், அவருடன் அன்புடனும் பழகிய ஓர் பெரியாரும் இவ்வாறு கூறினார்.

தனக்கென வாழாப் பிறர்க்கினியோனாய் எதையும் எவரும் அனுபவிக்க வேண்டும் எனும் இவரின் பரந்த நோக்கினை அமரர் பொ. கனகரத்தினம் அவர்கள் ஆற்றிய பல்வேறு சமூகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டுகளின் ஊடு காணக்கூடியதாய் இருந்தது. தனது கைப் பொருளை சுற்றத்தார், ஏழை எளியவர்கள், மற்றும் பலரும் பயனடையும் வகையில் தருமம் செய்து மனம் மகிழ்ச்சியடைந் தார்.

அமரர் அவர்கள் 1971 ல் ஒய்வு பெற்று தம் வாழ்வின் பின் பகுதியை சமூக சேவையில் முழுதாக அர்ப்பணிக்க எண்ணி தெய்வதரிசனத்திற்காகத் தன் பாரியாருடன் இந்தியா சென்று புனித ஸ்தலங்களைத் தரிசித்து ஊர் திரும்பினார். இவர் இரு முறை லண்டன் சென்று தம் இளைய மகளுடன் ஊர் சுற்றிப் பார்த்தும் வந்தார். பின் ஊண் உறக்கம் மறந்தார். பிறர் நலங்களில் மட்டுமே கண்ணும் கருத்துமாய் இருந்து தன்னால் இயன்ற சேவையை ஆற்றத் தொடங்கினார்.

திக்கற்றவர்களைத் தானே தேடிச் சென்று அவர்களை ஊக்குவித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து அவர்கள் இடர்களைப் போக்குவார். எந்த விதமான பிரதி உப காரத்தையும் ஏற்கமாட்டார். மரணச் சடங்குகளில் மிகவும் கடினமான பணிகளை தானே முன்னின்று ஏற்று நிறைவேற்றி வைப்பார். பலருக்கு நஷ்ட ஈடும் பெற்றுக்கொடுத்து அந்தக் குடும்பங்களின் எதிர்கால வாழ்வை வளம்படுத்தியுள்ளார்.

இவருக்கு ஊர்ப்பற்று மிகவும் அதிகமாயிருந்தது. சங்கானைக் கிராமத்தை வளம்படுத்தப் பெரும்பாடுபட்டார். சங்கானை மக்கள் சகல வசதிகளையும் சங்கானையிலேயே பெறவேண்டும், அரச திணைக்களக் காரியாலயங்கள் இங்கேயே அமைய வேண்டு மென்றும், இங்கிருந்து நகரக்கூடாதென்பதில் மிகவும் அக்கறை காட்டினார். வெற்றியும் கண்டார். சங்கானையிலுள்ள வைத்தியசாலை, தபாற்கந்தோர் சிறப்பாகச் செயலாற்றவும் மக்கள் கூடிய பயன் பெறவும் பாடுபட்டதோடு, புதிய பிரதேசச் செயலகக் கட்டிடம் சங்கானையிலே அமைய அயராது பாடு பட்டு, நிதி உதவியும் செய்து, அதை இங்கேயே அமைக்கப் பாடுபாட்டார். அது இன்று நனவாகி கட்டிடம் வளர்ந்து கொண்டிருக்கிறது. அதைப் பார்க்கத்தான் அவர் கொடுத்து வைக்கவில்லை.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலர் தோன்றலிற் தோன்றாமை நன்று" "நேர்மையே நிறைந்த செல்வம்" எனும் பொன் வாக்குகளுக்கிணங்க தன் வாழ்வை உண்மை வழி நின்று மக்கள் சேவையே மகேசன் சேவையாகக் கொண்டு நிறைவு கண்டவர் அமரர் பொ. கனகரத்தினம் அவர்கள் இதேபோன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் பணிகளிலும், இந்து மயானத்தின் விருத்தியிலும், பாட சாலைகளின் முன்னேற்றங்களிலும், விளையாட்டுக்கழக, நூல் நிலைய அபிவிருத்தியிலும் மிகுந்த சிரத்தை கொண்டார்.

உடற்சேவையோடு மட்டும் நின்றுவிடாது உளச்சேவையிலும் ஈடுபட்டார். இவரின் பேச்சையும், கண்டிப்பையும், அன்பையும், ஆலோசனைகளையும் தட்டாது அவர்தம் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் ஏற்று நடந்தனர். அமரர் பொ. கனகரத்தினம் அவர் களின் நெடிந்துயர்ந்த தோற்றமும் கம்பீரநடையும், கண்டிப்பும் அன்பு கலந்த பேச்சும் அனைவர் மனதையும் கொள்ளை கொண்டன. "தன் நம்பிக்கை தன் தெய்வ நம்பிக்கை" என்பதே இவரது தாரகமந்திரம் இதை மக்கள் மனதிலும் நிலைபெறச் செய்தார். இதன் துணையுடன் 1995 ம் ஆண்டு மக்கள் யாவரும் இடம் பெயர்ந்து சென்றிடினும் தன் பாரியாருடன் தமது இல்லத்திலேயே மனத்தை தளரவிடாது இருந்து ஆதரவற்றோர் க்ளுக்கு சேவையாற்றினார்.

பிரிவு என்பது தவிர்க்க முடியாத ஒன்று. 1997 இல் தன் இல்லாளின் பிரிவு தேய்வுறச் செய்தது. ஆயினும் தன்னால் பிறர் மனச்சோர்வோ, உடற்சோர்வோ அடையக் கூடாது என்ற திடமனப்பாங்கு கொண்டு தன் கவலையைத் தன் மனத் துள்ளேயே புதைக்க முயன்றார். அவ்வேளையிலும் தன் சேவையைத் தொடர முடியாது கண்டு மனவேதனைப்பட்டார். இதனைக் கண்ணுற்ற முருகப்பெருமான் அவருக்கு ஆறுதலளிப் பதற்காக வீட்டில் இருந்தபடி தன் சேவையைத் தொடரச் செய்ய திருவுளங் கொண்டார். மேலும் அந்நாளில் இவருக்கு சமாதான நீதவான் பட்டம் கிடைத்தது. தன் சேவையை இன்னும் தொடர வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி மனமகிழ்வுற்றார். சேவையைத் தொர்டர்ந்தார். எவரும் எந்த நேரத்திலும் அவரை அணுகி வேண்டியதைப் பெற்றுக்கொள்ளலாம். கடைசியில் தளர்ந்த நேரத்திலும் மகள், பேரப்பிள்ளைகளின் உதவியோடு தன் கடமையைச் செய்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தார்.

சிறிது காலத்தில் அவரது கண்பார்வை மங்கியது. இதனால் மீண்டும் வருத்தமுற்றார். தன் உற்ற துணைவனின் சோர்வைக் காணச் சகியாது தன் நினைவிலேயே வாடும் தன் கணவனை 1998 ஆகஸ்ட் 19 ம் நாள் தன்னுடன் அழைத்துச் சென்று விட்டார். அமரர் ஞானரத்தினம் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படுவர்"

- இவர் தன் கடைசிக் காலத்தில் தனது வீட்டில் அமைதியான சூழ்நிலையிலே தன் மூத்த மகள், மருமகன், பேரப்பிள்ளைகளின் அன்பான பராமரிப்பிலும், உபசரிப்பிலும், கவனத்திலும், மனநிறைவுடனும் வாழ்ந்து வந்தார்.

- ஆயிரமாயிரம் மக்களிடம் நெருங்கிப் பழகி அனைவர் உள்ளத்திலும் இடம்பெற்றவர் வறியவர் வாழ்வை வளம் பெறச்செய்தவர் தான் செல்லும் போது அவர்கள் அன்புப் பொழிவை மட்டுமே எடுத்துச் சென்றார்.

அவர் ஆத்மா சாந்தியடைவராக!

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிம்மதி அளித்த எங்கள் நிம்மதி ஐயா

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியவர் எங்கள் நிம்மதி ஐயா அவர்கள். அவர் தம் கருமத்தின் மூலம் பெருமையைப் பெற்றவர் மாத்திரமல்ல அறன்வழி நின்று புகழ் பெற்றவர். சங்கானை தேவாலய வீதியில் "நிம்மதி வாசம்" என்ற உறைவிடத்தை அமைந்திருந்தது. அன்புக்குரிய மனைவியாருடனும் அருமை மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடனும் வாழ்க்கை ஓடத்தை அமைதியுடன் ஓட்டியவர். அதே தேவாலய வீதியில் அமையப்பெற்ற எமது பாடசாலையாம் யா/சங்கானை ஸ்தான அ. மி. த. க பாடசாலையில் ஆரம்பக்கல்வியைத் தாமும் பெற்று தம் வழித்தோன்றல்களையும் பெறவைத்த காரணத்தால், தம் உளக் கோயில் அப்பாடசாலையை இறுதி மூச்சுவரை உளமார நேசித்துப் போற்றி வளர்த்து வந்தவர் எங்கள் நிம்மதி ஐயா அவர்கள். ஆயிரமாயிரம் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியை மனதிற்கொண்டு ஒழுகிய கூரையைச் சீர்படுத்தி, குடிநீர்த்தொட்டி அமைத்து உதவியவர். இவற்றோடு நின்றுவிடாது பாடசாலை நலன் விரும்பி, உபதலைவராக இறுதி மூச்சுவரை பாடசாலை சகல முயற்சிகளுக்கும் முன்வந்து ஆவலுடன் மனைவியாருடனும் எம்முடனும் தமது இனிய நேரங்களைச் செலவு செய்தது மட்டுமன்றி நிகழ்ச்சிகளைப் பாராட்டி சென்ற காலங்களை நாம் எண்ணுகிறோம். நெஞ்சு கனத்த பெருமூச்சைத்தான் எம்மால் கொட்ட முடிகிறது. அந்தக் காலம் மீண்டும் வருமா என ஏங்குகிறோம். தாங்கள் எம்பாடசாலைக்கு ஆற்றிய சேவைகள், உதவிகள் எவ்வளவோ அவை ஏட்டில் வடிக்க முடியாது எம் இதயத்தில் கனக்கின்றன. எமது வலது கையை இழந்து தவிக்கிறோம். ஐயா! மறக்க முடியுமா எமது இனிய நிம்மதி ஐயாவை என்ன செய்ய ஆளுக்கொரு திகதி வைத்து அழைக்கும் ஆண்டவன் நியதியை மாற்ற எம்மால் முடியாதே. எதிர்பாரா விதத்தில் இறைவன், ஐயா உங்களைத் தம்மிடம் அழைத்து விட்டாரே. இதனால் கவலையுறும் தங்கள் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலைக் கூறுவதுடன் அவர்கள் தங்கள் வழிச்சேவையை என்றும் என்றென்றும் எமது பாடசாலைக்கு நல்குவார்கள் என்ற நிம்மதியுடன் ஐயா அவர்களின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்தித்து நிற்கிறோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யா/சங்கானை ஸ்தான அ. மி. த. க
பாடசாலை
தேவாலய வீதி, சங்கானை

அதிபர்
ஆசிரியர்கள்
மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நிம்மதியில்" ஓர் பெரும் இடைவெளி

"நிம்மதி" பெரிய ஐயாவின் இறுதி யாத்திரையில் தமிழ் மக்கள் மேல் திணிக்கப்பட்டுள்ள "கிளியரன்ஸ்" கெடுபிடிகளாலும் போக்குவரத்துச் சீரழிவுகளாலும் எம்மால் கலந்து கொள்ள முடியாமல் போனாலும் அத்துயரச் செய்தி கொழும்பில் கிடைத்த பொழுது மிகவும் கவலை அடைந்து அகக் கண்களால் இறுதிச் சடங்குகளைப் பார்க்க முடிந்தது.

அவருக்குப் பிரியமான "கோடை மண்டபத்தில்" பெருந் திரளான மக்கள் மத்தியில் அவருடைய இறுதிச் சடங்குகள் நிறைவேறி இறுதி யாத்திரையில் ஊரே திரண்டிருந்தமையை பின்பு ஊர்ஜிதம் செய்ய முடிந்தது. 1997ம் ஆண்டு ஆவணி மாதத்தில் நாம் ஊர் வந்தபோது அவர் இல்லம் சென்று அவர்களோடு அளவளாவி வர முடிந்தமை மனதிற்கு ஓரளவிற்கு நிம்மதியைத் தருகிறது. ஆனால் ஈடுசெய்ய முடியாத ஒரு மாபெரும் மனிதனின் இழப்பினால் தவிக்கின்ற அவர்களது பிள்ளைகளோடு நாம் துயரத்தில் கலந்துகொள்ள முடியாமை எமது நெஞ்சத்தில் பாரமாக இருக்கிறது.

பெரிய ஐயாவை நினைத்துப் பார்க்கிறோம். நெடிய உருவம், உறுதியான உள்ளம், சமூக சிந்தனை, எல்லோருடனும் அன்புடன் பழகுகின்ற சுபாவம் உறவினர்களைக் கண்டால் குதூகலித்து விருந்தோம்பும் பண்பு சிந்தனையின் கூட்டு மொத்தம் "நிம்மதி" பெரிய ஐயா.

"நிம்மதி" இல்லத்தாருடன் திருமண உறவுகள் உண்டான பின்பு எமது உறவுகள் நெருக்கமடைந்தாலும் 1995 இல் ஏற்பட்ட இடப்பெயர்வினால் மேலும் இறுக்கமடைந்தது எனக் கூறலாம். கஷ்டமான சூழ்நிலைகள் எமது உறவுகளை வளர்க்கிறது என்ற யதார்த்தத்தையும் எம்மால் உணர முடிந்தது. இடப்பெயர்வு ஏற்பட்ட பொழுது "நிம்மதி" பெரிய ஐயாவும் பெரிய அம்மாவும் மனத் தைரியத்தோடு பிள்ளைகளை வழியனுப்பி வைத்து விட்டு தாம் அங்கேயே இருந்து ஊர் மக்களுக்கு காவலனாகவும் சேவகனாகவும் இருந்து பணியாற்றினர். தள்ளாத வயதிலும் மனஉறுதியும் கொள்கைப் பிடிப்பையும் எம்மால் அவதானிக்க முடிந்தது. 1989ம் ஆண்டு இந்தியப் படையின் தாக்குதலுக்குள்ளாகி மரணமடைந்த பருத்தித்துறையைச் சேர்ந்த ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபால் அதிகாரியின் உடலை சங்கானையிலிருந்து பருத்தித்துறை வரை தனது பொறுப்பிலேயே கொண்டுவந்து ஒப்படைத்தமை அவரது சமூகப் பொறுப்புக்கும் துணிவுக்கும் ஓர் நல்ல எடுத்துக் காட்டு. இயன்றவரை அயலவர்களுக்கு உதவவேண்டும். வறிய மக்களுக்கு கைகொடுத்துத் தூக்கிவிடவேண்டும் என்கின்ற பரந்த மனப்பாங்கு அவரோடு இருந்து விடாமல் அவர்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளிடமும் பற்றிக்கொண்டமை அவ்வூர் மக்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும்.

எவரும் எந்நேரமும் அவர் வீட்டுக்குள் வந்து அவரைச் சந்தித்து ஆறுதல் பெறக்கூடிய வகையில் வீட்டின் கதவுகள் எப்போதும் அகலத் திறந்திருந்தன. அவ்வாறான ஒரு பண்பினை பிள்ளைகளுக்கும் ஊட்டி வளர்த்தார்.

சிலபேருக்கு பதவிகளால் பொறுப்புக்களினால் ஏற்றம் ஏற்படுகிறது. ஆனால் நிம்மதி பெரிய ஐயா சமாதான நீதவானாக நியமனம் பெற்றபோது அந்தப் பதவிக்கு அவரால் பெருமை சேர்ந்தது. சமயப் பணிகளிலும் ஆலய நிர்வாகங்களிலும் அவருடைய தலைமைத்துவம் பிரகாசித்ததைக் காணமுடிந்தது. மற்றவர்களையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு காரியங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்கின்றமை அவருடைய தனிச்சிறப்பு. அவருடைய அருமைப் பாரியார் மறைந்து கிட்டத் தட்ட ஒரு வருட காலத்துள் அவரும் அவரோடு இணைந்தமை அவர்களுக்குள்ளே இருந்த குடும்ப அந்நியோன்னியத்தை பிரதி பலிக்கிறது என்று எண்ணத்தோன்றுகிறது. ஊருக்கு ஒரு பிதா மகன், வழிகாட்டி, குடும்பத்திற்கொரு தலைவன், உறவினர்களுக்கு ஒரு கருணையுள்ளம் மறைந்து விட்டது. நிம்மதியில் ஒரு பெரிய இடைவெளி .......... அமைதி. அவருடைய ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்பதோடு அவரது பிரிவினால் வாடும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளுக்கு அதைத் தாங்குகின்ற சக்தி இறைவன் வழங்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

46, மீற்றர்ஸ் லேன்
தெஹிவளை

இராஜசுப்பிரமணியம் குடும்பத்தினர்
"சுமதி இல்லம்"
புலோலி மேற்கு
பருத்தித்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Late Mr. Ponnaiah Kanagaratnam J. P.
### 'Nimmathi' Chankanai.

Kanagu for his elders, Kanagu annah for his juniors, Kanaga uncle for others and Kanags for his friends, a loyal gentleman who possessed noble qualities disappeared from our sight to join the feet of Murugan,

Born in Chankanai, at a tender age he lost his father, he dutifully took over the family responsibility, looked after the welfare of his widowed mother, sister and brothers, Educated at St. Patricks college Jaffna he possessed a fine english vocabulary which he further polished up with the monthly issue of the Readers digest in his hand till his last days.

A person who never idled even for a little while, he got himself engaged in some form of help to mankind. His Motto was offer your services in what ever form you can to uplift society. He possessed only the giving hand; he would say no offerings please. As the most respected senior cousin brother in our family circle, we have failed in our attempt to give him even a small birthday present as a token of love affection and regard.

In the services of the then P. W. D from his young days at Norwood and Maskeliya he performed his duties par excellence won the commendation of his superiors and the Public. He was very popular amongst the rich and poor. He was instrumental in construction of the New town Maskeliya Murugan temple. He was a devotee of Murugan, and not only hindu religious activities he took great interest in Budhist religious activities connected to SriPada and other local Budhist temples. He would say we Human reach one place by different paths. He was a much wanted man in any gathering where there was a problem to bring about amicable settlement.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Back to his home "Nimmathi" church road Chankanai after retirement from Government service he did not enjoy nimmathi but was like a workerbee always on the move to help othersr. He was holdingkey posts in several welfare societies. He was an active member of the Illupaithai Muruga-moorthy temple paripalana sabai. In his last laps of life he was a full time social worker, who was out spoken and bound by honesty and dicipline. His purse left behind would testify facts, he did not live for himself or his family, he lived to help those in want,

He had a good companion an ideal wife lata Mrs. Gnanaratna a soft spoken pious lady who acted as a support pillar jn his religious and diciplined way of life and the renderence of his serviee to help mankind.

Be in the angels world we Pray Bagawan Bawa to bless your soul. We would join you one day.

He leaves behind two dutifull daughters and two sons of whom the elder daughter and son in-law have taken over the services to mankind. May Lord Murugan bless them with perfect health to perform this mission of services to the people of Chankanai.

( Dr. S. Ariyaratnam, Horombawa. )
'Ary' joining me
Ariathankachy and Nesathamby



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் காப்பாளர், நல்வழிகாட்டி!

அன்பதனை அள்ளிச் சொரிந்தே
அருகில் இருந்து ஆதரித்து
இன்பமாய் எமை அணைத்து
இதமுடன் பேசி மகிழ்ந்து
துன்பம் எல்லாம் போக்கி
துயர்கள் பல துடைத்து
உயர்வுக்கு தோழ் கொடுத்து
உயர்த்தி வைத்த உத்தமர்.

இவரோ

பண்பின் இருப்பிடம் பாசத்தின் உறைவிடம்
துணிவின் பெருமிடம் தூய்மையின் நல்லிடம்
ஊரின் சிறப்பிடம் உபதேசத்தின் மகத்துவம்
வழிகாட்டலுக்கு ஒரு முன்னோடி
வளம்படுத்தலுக்கு முது பெரும்படி
சேவையில் ஆதவன், தேடிச் சென்றோரின் நாயகன்
கடமையில் கைதேர்ந்த மதி, மாதவன்
தொண்டிற்கு சுடர்விடும் சோதியன்
எல்லோர்க்கும் என்றும் ஓர் இனியவன்
எம் சபையைக் காத்து நின்ற காவலன்.

எங்கள் அமரரின் ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

வெல்வில் சிவசுப்பிரமணிய தேவஸ்தான
வழிபடுவோர் சபை,

அறநெறிப் பாடசாலை நிர்வாகிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானையின் "பிதாமகன்"

அமரர் பொன்னையா கனகரத்தினம் J. P.(நிம்மதி) அவர்கள் மஸ்கேலியா பிரதேசத்தில் பெருந்தெருக்கள் திணைக்களத்தில் ஓவசியராகக் கடமை புரிந்தபோது அளப்பரிய அரும்பணிகளை மேற்கொண்டிருந்தார். ஒய்வுபெற்றபின் சங்கானையில் தொடர்ந்து தமது நற்பணிகளை ஆரம்பிக்கலானார். இக் காலப் பகுதியில் சமூக சேவைகள் பலவற்றில் ஈடுபாடுகொண்டு அளப் பரிய சேவைகளை ஆற்றினார். இந்திய இராணுவம் இம் மண்ணில் காலூன்றிய காலப்பகுதியில் மக்கள் தமது இருப் பிடங்களைவிட்டு வெளியேறி முகாம்களிலும், மடங்களிலும் தங்கியிருந்து ஒரு நேர உணவுக்குக்கூட வழியின்றி அல்லற்பட்ட நேரத்தில் அதிகாரியிடம் துணிச்சலுடன் நேரில் சென்று தொடர்பு கொண்டு மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிவைத்தார். அகதிகள் புனர்வாழ்வு அமைப்பினூடாக போஷகர் பதவியேற்று எல்லா மக்களுக்கும் தேவையான உணவுப் பொருள்களை உரிய முறையில் பங்கீடுசெய்து வழங்கு வதற்கு முன்னின்றுழைத்தார். இதேகாலப்பகுதியில் தெரு வீதி களில் தேடுவாரற்றுக்கிடந்த பிணங்களைத் தாமே கொண்டு சென்று அடக்கம் செய்துவைத்த பெருமகனாவார்.

அண்மையில் 1995 ம் ஆண்டு காலப்பகுதியில் இலட்சக் கணக் கான மக்கள் இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களுக்கும் சென்று சீவனம் செலுத்திய காலத்திலும் தாம் மட்டும் இடம்பெயராமல் துணிவுடன் இருந்து கொண்டு இங்குள்ள மக்களுக்குப் பல வழி களிலும் அரும்பணியாற்றியதோடு மட்டுமல்லாமல் மக்கள் மத்தி யில் ஏற்பட்ட அகால மரணங்களின்போதும் அவர்களது சடலங்களை உரிய முறையில் அடக்கம் செய்வதற்கு உதவினார்.

1989 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பிரஜைகள் குழுத் தலைவராக இருந்து இராணுவத்திற்கும்,பொதுமக்களுக்குமிடையே புரிந்துணர்வோடு செயற்பட்டு மக்களின் அன்றாடத் தேவை களை நிறைவேற்ற உதவிபுரிந்தார்.

அண்மைக் காலத்தில், அன்னாரது சேவைக்கு மகுடம் வைத்தாற்போல் சமூகசேவைகள் அமைப்பொன்றைத் தோற்று வித்து அவ்வமைப்பின் தலைவராக இருந்து சங்கானைப் பிர தேசத்தில் இருந்து இடம்பெயர இருந்த பிரதேச செயலகத்தைச் சங்கானையில் நிறுவுவதற்கு ஆதிமூலகாரணமாக இருந்து செயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டமை மறக்கமுடியாத ஒரு நிகழ்வாகும். அன்னார் அமைப்பு ரீதியாகச் சேவையாற்றியதோடமையாது தனிப்பட்ட ரீதியிலும் பொதுமக்களின் கஷ்ட, நஷ்டங்களில் பங்குபற்றி அவர்களுடைய முக்கிய தேவைகளையும் தம்மாலியன்றளவு நிறைவேற்றி வைத்தார்.

தன்னலமற்ற சேவை மனப்பான்மையுடைய "நிம்மதி" ஐயா அவர்கள் "சங்கானையின் பிதாமகன்" என்று சொன்னால் மிகையாகாது.

அன்னாரது ஆன்மா நிம்மதி, சாந்தி பேரின்பம்
அடைய அனைவரும் பிரார்த்திப்போமாக.

சங்கானை சமூக சேவைகள் அமைப்பு

---

# என்றும் உள்ளத்தில் நிறைந்து நிற்கும் பெரியய்யா

எங்கள் நெஞ்சம் கனலாகிப் போனதுவே
எங்கள் கண்கள் குளமாகிச் சொரியுதே
எங்கள் பெரியய்யாவின் நினைவு உள்ளத்தில் நிறைந்து நிற்குதே
எங்களை வாட்டுதே எப்போது இனிக் காண்போம்.

எங்கள் பெரியய்யாவின் ஆத்மா சாந்திக்காக
இறைவனை வேண்டுகிறோம்.

சுகிர்தமணி கடம்பேஸ்வரன்
டென்மார்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தால் உயர்ந்த எங்கள் ஐயா

பிறந்தவரெல்லாம் ஓர் நாள் இறப்பர் எனினும், ஐயா நீங்கள் எங்களை தவிக்க விட்டு இறைவனடி சேர்ந்தமை பொய்யாக இருக்கக் கூடாதா? என்றே எண்ணி எண்ணி மனம் துடிக்கிறது. ஐயா, உங்களை நினைக்கும் போது கண்ணீர் வருகிறதே !! நாம் நலமுற வேண்டும் என்பதற்காக பல நல்லறிவுரைகள் கூறியும், பல "பகிடிக்கதைகள்" கூறியும் எங்களுடன் சேர்ந்து சிரிக்கும் காட்சி இன்னும் என் மனதில் நிழலாடியபடியே இருக்கிறது. மனதில் வஞ்சகமில்லாத உங்கள் குழந்தை உள்ளம் என்னை மிகவும் கவர்ந்த விடயம். எண்பது வயதிலும் வாழ்க்கையில் நீங்கள் எதிர்நோக்கிய பல சுவையான பழைய அனுபவங்களை அப்படியே நடந்தவாறு ஒழுங்காக கூறும் போது உங்கள் ஞாபக சக்தியை கண்டும் மற்றும் எக்காரியம் செய்தாலும் "செய்வினை திருந்தச் செய்..." என்பதற்கிணங்க சீராக செய்வதைக்கண்டும் மெச்சத் தூண்டும். "தன்னம்பிக்கை தன் தெய்வ நம்பிக்கை" என்னும் கருத்தை மற்றையவர்களுக்கு எடுத்து கூறவதோடல்லாமல் நீங்களும் அதற்கிணங்கவே துணிவுடன் செயற்படும் விதம் மற்றவர்களையும் அவ்வாறே செயற்பட தூண்டும்.

ஐயா, நீங்கள் மனச்சோர்வடைந்து இருந்தமையை ஓர் நாளும் நாம் கண்டதில்லை. ஆனால் அம்மம்மாவின் இழப்பின் பின்னர் நீங்கள் மனரீதியாக பாதிப்படைந்தமையை உங்கள் தோற்றத்தில் உணரக்கூடியதாகவே இருந்தது. இறுதிவரை ஒருவரையும் கஷ்டப்படுத்தாது ஆரோக்கியமாக இருக்கவேண்டும் என சொல்லுவீர்கள். ஆனால் இறுதிக்காலத்தில் நீங்கள் சிறிது நோய்வாய்ப்பட்டு சற்று அவஸ்தைப்பட்டதை அறிந்து மனத்திற்கு கஷ்டமாக இருக்கிறது. உங்களை நெடுநாட்கள் துன்புறுத்த இறைவன் விரும்பவில்லை. அம்மம்மாவிடம் விரைவில் சென்றுவிட்டீர்கள். அதுவே இறைவனின் விருப்பம் போலும். ஆனால் அதில் ஓர் மனச்சாந்தி பெற்றிருப்பீர்களென்று எம்மனம் திருப்தி அடைகிறது.

உங்கள் இறுதி அத்தியாயத்தில் ஒரு முறை உங்கள் பாசம் நிறைந்த முகத்தை கண்டு ஆறுதல் அடையமுடியவில்லை என மனதில் ஓர் வேதனை. உங்கள் இறுதி காட்சியை கண்டு அம்மா, அப்பா, என் சகோதர சகோதரிகள் எவ்வளவு தவித்திருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் ''

உள்ளத்தில் உயர்ந்தவர்கள் இறைவனின் திருவடிகளை ஆடைவது நிச்சயம் ஐயா, நீங்கள் எங்களை விட்டு பிரிந்து சென்றாலும் என்றும் எம் நெஞ்சங்களில் வந்துகொண்டே இருப்பீர்கள்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

உங்களன்பு பேத்தி
சிவாஜினி கருணாகரன்
( U. K. )

---



# மகாத்மா காந்தி அடிகள் பஜனை

ரகுபதி ராகவ ராஜா ராம்
பதித பாவன சீதா ராம்
ஈஸ்வர அல்லா தேரே நாம்
ஸபகோ சன்மதி தே பகவான்
ராம ராம ஜெய ராஜா ராம்
ராம ராம ஜெய சீதா ராம்

(இவர் விரும்பிப் படிக்கும் பாடல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயா... உங்களிடம் சில கேள்விகள்...

நிம்மதி
**சங்கானை**
18-09-98

*என்றும் என் அன்புள்ள ஐயாவிற்கு உங்கள் அன்புப் பேர்த்தி அஞ்சலா எழுதிக்கொள்வது.*

நீங்கள் எங்களையெல்லாம் தவிக்கவிட்டுச் சென்று இன்றுடன் ஒருமாதம் ஆகிவிட்டது ஐயா. காலம் தன் வேலையைச் செய்கிறது ஆனால், எங்களால் ஒன்றுமே செய்யமுடியாமல் இருக்கிறதே ஐயா. இங்கு ஒவ்வொரு பொருட்களும், மரங்களும் பூக்களும் உங்களை நினைவூட்டியபடியே இருக்கிறது. எப்படி ஐயா எம்மை இப்படி தவிக்கவிட்டுச் சென்றீர்கள்?

ஐயா, நான் நினைவு கூரவிரும்பாத நாள் 19-08-98 ஐத்தான். முதல்நாள் பகல் நீங்கள் பட்ட அவஸ்தையைப் பார்த்துப் பார்த்து மனக்கலக்கமுற்றேன், ஆனால் இரவு நீங்கள் அமைதியாய் மூச்சுவிட்டதைக் கண்டு மிகவும் மனத் தென்புற்று நித்திரைக்குச் சென்றேன். ஐயா எப்படி அதைச் சொல்வேன்! அதிகாலை 4 மணிபோல் அம்மாவின் கலங்கிய குரலின் மூலம்... காலதேவனின் அரவணைப்பு "உங்கள்" பொன்னுடலில் சங்கமமான செய்தியைக் கூறியபோது... இந்தப் பிரபஞ்சத்தின் மீது ஒரு இனந்தெரியாத, புரியாத வெறுப்பும், கசப்பும் என்னுள்ளேயே கொழுந்துவிட்டு எரிவது போல் உணர்ந்தேன். நெஞ்சில் பிளவு ஏற்பட்ட பிரமை. கதறினேன், துடித்தேன் தள்ளாடியபடி ஒடிவந்தேன். மற்றைய வேளைகளில் "ஏது விஷயம்" என அறிந்து ஆறுதல் சொல்லும் உங்களை அன்று காணாது தவித்தேன் அன்று தொடக்கம் நீங்கள் என்னிடம் வரவில்லை வரவே இல்லை! ஏன் ஐயா? அப்படி நித்திரையில் உங்களுக்கு அவ்வளவு நாட்டமா?

ஐயா, என்ன விஷயம், என்னபுதினம் என்றாலும் எனக்கு எல்லாம் ஆசை பொங்க கூறுவீர்களே. நான் செய்யும் சில தவறுகளைப் 'பகிடி' மூலம் உணர்த்தித் திருத்திடும் நீங்கள், இந்த உலகின் மேடுபள்ளங்களை எல்லாம் உடனிருந்து வழிகாட்டிய நீங்கள் நான் என்ன தவறு செய்தேன் என்று எனக்குக் கூடச் சொல்லாமல் போனீங்கள் ஐயா?! இரவு அம்மம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து கூப்பிட்டாவா் அதுதான் அவவின் மனதையும் புண்படுத்தக் கூடாது என அவசரத்தில் ஒருவருக்கும் சொல்லாது ஓடி விட்டீர்களா? அன்று அப்பா சற்றுமுன் உங்கள் உடல் நிலையைப் பார்த்துவிட்டுச் சென்றபோதுங் கூட பேசாது தானே இருந்தீங்கள் ஐயா, அண்ணா இரவு பகலாய் உங்களை தூக்கி தன் மேல் சாத்திவைத்துக் கொண்டு உங்கள் தேவையைக் கவனித்தாரே. அப்போது கூட சொல்லாது ஏன்விட்டீர்கள்? ஐயா, எனக்குத் தெரியும் எல்லோரிற்கும் ஒவ்வொரு செல்லப்பெயர் வைத்து அழைக்கும் நீங்கள் அன்றும் அன்பொழுக வழமைபோல் அழைத்து கூற எத்தனித்திரும்பீங்கள் என்று; ஆனால் உங்களால் முடியாது தவித்திருப்பீங்கள். எங்களை நீங்கள் இருக்கும் போதே மனம் நோகடிக்க விரும்பியிருக்க மாட்டீங்கள்.

ஐயா, நீங்கள் முதல் நாள் திங்கள் என் கையைப் பிடித்தீர்கள் சற்று நேரத்தில் பிடி இறுக்குவதும் தளர்த்துவதுமாக இருந்து, முழித்து சுற்று முற்றும் பார்த்தீங்கள். அப்போது அம்மம்மாவின் படத்தைப் பார்த்ததையும் நான் கண்டேன். அப்பவே எனக்கு இரகசியமாக உணர்த்தினீர்களோ என யோசிக்கிறேன் ஐயா. ''என்னை மட்டும் தனியே தவிக்கவிட்டு நீங்கள் மட்டும் போனது நியாயமோ'' என அம்மம்மாவிடம் கேட்கப் போய்விட்டீங்களா? அப்போ ஏன் எம்மை மட்டும் தனியவிட்டுப் போவது நியாயம் என உங்களுக்குத் தோன்றியது? ''இறைவன் இட்ட நியதிக்கு நான் என்னம்மா செய்ய'' என நீங்கள் இப்போது என்னைக் கேட்பது போல் உங்கள் குரல் காதினுள் ஒலிக்கிறது.

ஐயா, நீங்கள் யாரையுமே மனம் நோகவிடாது ஒரு சிறு மனத்தாங்கலுக்கும் இடமளிக்காது இருந்தது நான் அறியாத ஒன்றல்ல. அப்படியிருக்க அன்று என்ன ஆறுதலை மனநிம்மதியை ''நிம்மதி'' யில் விட்டுச் சென்றீர்கள்? ஆயிரம் ஆயிரம் மக்களிடம் நெருங்கிப் பழகி அனைவரின் உள்ளத்திலும் இடம் பிடித்துவிட்ட நீங்கள் அன்று உங்கள் இறுதி யாத்திரையில் கதறிய போது நீங்கள் மட்டும் எழவே இல்லையே, ஏன் ஐயா? ஆனால் ''நான் உங்களுடனேயே இருக்கிறேன்,' என்று கூறுவது போல் உங்கள் கனிந்த முகத்தில் அழகாய் ஒரு புன்னகை.

எல்லாச் சிறப்புக்களும் உங்களிடத்தில் பொருந்தியிருந்தும் எதுவும் பெருமை கொள்ளாத மனிதராய்த்திரிந்து தன்னைக் காட்டிக் கொள்ளாப் பெருமகனாக வாழ்ந்து சங்கானை சமூகத் தொண்டர், ஏழைப் பங்காளன் எனும் பெருமைகளை மட்டும் சூடிச்சென்று விட்டீர்கள் ஐயா, நான் அறிந்தவரை நீங்கள் ''தனக்கென வாழாப்பிறர்க் கினியான்'' தான் வீட்டில் நீங்கள் எங்களுடன் இருக்கும் நேரம் இரவு மட்டும் தான். பகல் முழுவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் ஊர்மக்களுடன் தாமே இருந்தீர்கள். பகல் வீட்டில் நின் றால் Summer House ற்குள் போயிருந்து நாடி வருவோர்க்கு 'இல்லை' எனாது ஓடி ஓடி உதவி வந்தீங்கள் ஐயா, இப்போது Summer House ல் 'ஓ' வென காற்று கூவி அழுகிறது. பின் உங்கள் உடல் நலிவுற்ற காலங்களிலும் Summer House ற்குள் போக முடியாவிட்டாலும் உள்ளிருந்து வந்தவரைத் திருப்பி அனுப்பாது உதவி புரிந்தீர்கள் இதையெல்லாம் நான் கண்டு பெருமை கொண்டதுண்டு. இப்போது?

ஐயா, நீங்கள் முன்பு சைக்கிளில் வெளிக்கிட்டால் எங்க ளுக்கே என பழங்கள் உணவுப் பண்டங்கள் வேண்டி முன் basketனுள் போட்டு எடுத்து வருவீங்கள். வந்ததும் வராததுமாக ஆசைபொங்க எம்மை அழைத்து தந்துடுவீங்கள் அதைக்கொண்டு இப்ப என்ன Season என நாம் அறிந்திடுவோம். இப்போது நீங்கள் ஆசையுடன் பாதுகாத்த சைக்கிள் தனிமையில் வாடுவ தைப் பார்த்து நாமும் கண்ணீர் வடிக்கிறோம்.

ஐயா, கலவரம் காலங்களில் எங்கு கலவரங்கள், ஆபத்துக் கள் நடக்கிறதோ உடனடியாக நாங்கள் சொல்வதையும் கேளாது சைக்கிளில் வெளிக்கிட்டு அங்கு சென்று அல்லல் உற்றோருக்கு உதவிய பின்னரே வீடு திரும்புவீங்கள். அப்போது நாங்கள் கேட்டால் ''வீரனுக்கு ஓர் மரணம், கோழைக்கோ கோடி மரணம்'' என்பீர்கள் ஐயா, இனி நாங்கள் நீங்களின்றி என்ன செய்வோம்?

நாங்கள் உங்களுடன் எவ்வளவு பகிடி விட்டாலும், எது செய்தாலும், உங்களிடம் கோபம் வந்ததைக் காணவே இல்லையே. ஐயா நீங்கள் எங்களுக்கு எவ்வளவு அறிவுரைகள், பொது நலன் கள் பற்றியெல்லாம் கூறுவீர்கள். முன்பு நடந்த பழங்கதைகள் கூறுவீங்கள். உங்களுக்கு ஜெனியக்காவின் பலகாரங்கள் என்றால கொள்ளை பிரியமே, எப்படி ரசித்து ரசித்துப் பகிடி சொல்லி யெல்லாம் சாப்பிடுவீங்கள். இப்ப எல்லாவற்றையும் விட்டு எப்படி ஐயா உங்களுக்குச் செல்ல மனம் வந்தது?

ஐயா முன்பு நீங்கள் ஒரு நாள் கூட வருத்தம் வந்து மருந்துவகை எடுத்ததை நான் காணவே இல்லையே. ஆனால் பின்னர் இறுதிக் காலங்களில் பொல்லுப்பிடித்து மருந்துகள் சாப்பிடுவதற்குக் கஷ்டப்பட்டதை கண்டு மனம் தாங்க முடியாது கவ லையுற்றேன். என் அன்பு ஐயாவை எப்படிக் காணக்கூடாது என நினைத்தேனோ அவற்றை எல்லாம் இறைவன் காணவைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டான் என நினைத்து மனம் வெதும்புகிறேன் ஐயா. உங்களைப் பற்றி இப்படியே நிறைய எழுதலாம் ஆனால் ஐயா, நான் என்கவலைகளை எழுதி உங்கள் மனம் நோகவிட விரும்பவில்லை. இப்போ நீங்கள் அம்மம்மாவுடன் சந்தோஷமாக இருப்பீங்கள். புதினங்கள் சொல்லி முடிந்திராது என்ன ஐயா?

ஐயா, நீங்கள் எங்களையெல்லாம் ஏங்கவைத்து, ஏகனடி சேர்ந்தாலும் – எம்முள்ளத்துள் உறைந்து விட்டீர்கள். உங்கள் வாரிசுகளாகிய நாம் உங்களின் அடிச்சுவட்டைத் தொடர்வோம்.

நாமனைவரும் உள்ளம் கரைந்து உங்களிற்கு சுகம் சொல்லி கண்ணீர்ப் பெருக்குடன் விடைபெறுகிறேன். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
இவையாவற்றிக்கும விடை காண
முடியாது தவிக்கும்
உங்களன்புப் பேத்தி
அஞ்சலா.
(சிவாஞ்சலி)
சிவனேசன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

பொன்னையா + அன்னம்மா

இரத்தினம் + நடராஜா

கனகரத்தினம்

ஜெயராஜா + அன்னம்மா

அரசரட்ணம் + ருக்குமணி

நடராஜா + இரத்தினம்

குணரத்தினம் + தவமணி

கணபதிப்பிள்ளை + ஆச்சிமுத்து

சிவஞானம் + பரமேஸ்வரி

ஞானரத்தினம் +

செல்வரத்தினம் + செல்வராணி

யோகரத்தினம் + மகேஸ்வரி

இராஜேஸ்வரி

இரத்தினேஸ்வரி + அரியரத்தினம்

பத்மராஜன் + இந்திராணி

இராஜயோகினி + சிறிகாந்தன்

ரஜீவ் கார்த்திகன்

சஞ்சீவ் விஜேந்திரா

சுஜித்தா

பத்மராணி + சிவன்நேசன்

சிவானி + கருணாகரன்

சிவாஜினி + கருணாகரன் = ஜெனுஷன்

சிவாஞ்ஜன்

சிவாஞ்சலி

இரவீந்திரன் + அம்பாளிகை

சஞ்ஜே

சியாமா

குணரதி + லோகேந்திரா

டோன் மீரா

ஜேசன் ரவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



எமது குடும்பத் தலைவர் சுகக் குறைவுற்றபோது ஒத்தாசை நல்கியோருக்கும், துயரச் செய்தி கேட்டு உடனே ஓடோடி வந்து உதவியவர்களுக்கும், வாடி நின்ற எம்மைத் தேடிவந்து தேறுதல் கூறியோருக் கும் சிரம் தாழ்த்தி நன்றி கூறுகின்றோம்.

இறுதிக் கிரியைகளைப் பொறுப்பேற்று நடாத்தியோ ருக்கும், தேவாரப் பாக்கள் பாடியோருக்கும், மலர் வளையம் சாத்தியோருக்கும், பூமாலை அணிவித் தோருக்கும் இரங்கல் உரையாற்றியோருக்கும், பூத வுடலைச் சுமந்துசென்றோருக்கும் எங்கள் நன்றி களைக் காணிக்கையாக்குகின்றோம்.

மற்றும் தங்கள் எழுத்துக்களால் துயர் தீர்க்க முனைந்த கவிஞர்களுக்கும் நன்றி கூறுகின்றோம். அஞ்சல்மூலம் அழுது தீர்த்தவரின் கண்ணீரையும் நினைக்கத் தவறவில்லை. கடல்கடந்து வாழ்கின்ற கருணையுள்ளங்களின் இரங்கற் செய்திகளையும் மறக்கவில்லை. மற்றும் ஆகாரம் நல்கியோரிற்கும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பினை ஏற்று தவறாது வருகைதந்து சிறப்பித்த

அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது உள்ளத்தின் உணர்வினால் ஊறிய நன்றிகளைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாலை [illegible]ா அச்சகம், கந்தர்மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org